திரு. ரா. உமாநாத்: அக்யூஸ்டு பெயர்களைச் சொல்லலாம் அது ஒன்றும் இல்லீகல் அல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: என்னிடத்தில் இருக்கு தகவல் அடிப்படையில் சொல்லுகிறேன். அந்த மருந்துகள் எந்தக் கடையில் இருந்தன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. யார் மூலமாக அந்த மருந்துகள் எடுத்துச் செல்லப்பட்டன என்பதுதான் முக்கியமானது. இரண்டு மூன்று பேர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதைச் சொல்வதற்கு சங்கோஜப்படவில்லை. சொன்னதற்குப் பிறகு எக்ஸ்பஞ்ச் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அது நிரூபிக்கப்படவில்லை—

We are not able to prove. We have proof where it was found. We are not able to sudstantiate who did it exactly. We have charged. We have complained against some persons but they ar saying 'No'. It is sub-judice.

கனரக ஊர்திகளில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள்.

*வினா எண் 96—திரு. செ. செம்மலை: திரு. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற பி. சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சாலை விபத்துக்களைத் தடுக்க லாரி, பேருந்துகள் போன்ற வாகனங்களில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது அமலாக்கப் படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) எலெக்ட்ரானிக் முறையில் இயங்கும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியினை பேருந்துகள், ஒப்பந்த ஊர்திகள் (ஆம்னிபஸ்), சுற்றுலா ஒப்பந்த ஊர்திகள், மற்றும் கனரக சரக்கு வண்டிகளில் கட்டாயமாகப் பொருத்த வேண்டும் என்று தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமலில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அப்படிப்பட்ட எலக்ட்ரானிக் கருவிகள் பொருத்தப்பட்ட பிறகு அதனுடைய நோக்கமான சாலை விபத்துக்கள் குறைந்திருக்கிறதா

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தக் கருவி கிடைப்பது அரிதாக இருக்கும் காரணத்தால் கொஞ்சங் கொஞ்சமாக, படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு செயல் பட்டுக் கொண்டிருக்கிறோம். முதல் முறையாக அண்ணா

போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் 51 பேருந்துகளுக்கு இந்தக் கருவியைப் பொருத்தியிருக்கிறார்கள். அதிலே நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கடந்த 24 ஆம் தேதி திருப்பதியில் நடந்த தென் மாநில போக்குவரத்து அமைச்சர்கள் கூட்டத்தில் கர்நாடக அமைச்சர் அவர்கள், அவர்கள் மாநிலத்தில் அதை அதிகமாகப் பயன்படுத்தியிருப்பதாகவும் அதனால் நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இதை படிப்படியாக அமல் நடத்துவதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். 1979-ல் நடந்த சாலை விபத்துக்களைவிட 1980-ல் விபத்துக்கள் அதிகமாகியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு சிகரம் வைத்தாற்போல் நேற்றையதினம் ஐஸ்ஹவுஸ் பக்கத்தில் நம்முடைய பல்லவன் பஸ் வேகக் கட்டுப்பாடு இல்லாமல் சென்றதன் காரணமாக பக்கத்தில் இருந்த அம்பாசிடர் காரைப் பாதுகாக்கவேண்டுமென்று திருப்பி அதன் காரணமாக இளம் பெண்ணும் குழந்தையும் இறந்ததும் அதைப் பார்த்த அதிர்ச்சியில் டிரைவர் இறந்ததும் அரசு அறியும். ஆகவே, அரசு உடனடியாக இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்துவதை எல்லாப் பகுதிகளிலும் அமல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதையெல்லாம் இந்த அரசாங்கம் ஆழமாகக் கவனித்து தெரிந்துதான் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளை பொருத்தவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறது. வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றுதான் இருக்கும் காரணத்தால் அவர்களுக்கே எல்லா ஆர்டர்களையும் கொடுக்கும்போது தவறுகள் ஏற்படக் கூடிய நிலை ஏற்படும் என்ற காரணத்தால் படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முடிவுகளை எடுத்திருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை உற்பத்தி செய்ய போதிய அவகாசம் இல்லையென்றும் ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறதென்றும், அதனால் படிப்படியாக இந்தக் கருவி பொருத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி படிப்படியாக அந்தக் கருவிகளைப் பொருத்துவதற்குள்ளாக பல உயிர்கள் பாதுகாக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே அரசாங்கமே அதற்காக ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து அதை உற்பத்தி செய்து பேருந்துகளிலே விரைவிலே பொருத்துவதற்கான நடவடிக்கையை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசாங்கமே அதை ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்துத் தான் செய்ய வெண்டும். ஏற்கெனவே ஆரம்பித்தவர்கள் கொடுப்பதிலே சில குறைகள் இருக்கின்றன, அதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் விரைவிலே தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு சிலர் ஆரம்பிக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டு

மானால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே இதுபோன்ற கருவிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண் டிருக்கிறோம். இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப்பிறகுதான் இதைக் கண்டுபிடித்து நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: இந்த வேகக்கட்டுப்பாடு அரசு பஸ்களுக்கு மட்டுமா? அல்லது தனியார் பஸ்களுக்கும் லாரி களுக்கும் செயல்படுத்தப்படுமா? இந்த வேகக்கட்டுப்பாட்டை வேகமாகச் செயல்படுத்துவதற்கு அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லி விட்டேன். பேருந்துகள் என்று சொன்னாலே தனியார் பேருந்து களையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். கனரக ஊர்தி ஒன்று சொன்னேன். கனரக ஊர்தி என்றாலே சரக்கு ஊர்தி களையும் அதாவது லாரிகளையும் சேர்த்துத்தான். இதை விரைவாகக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் நீங்கள் வாங்குகிற கார்களுக்குக்கூட இதைப் பொருத்தவேண்டுமென்று சொல்லத் திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவில்—சென்னை பேருந்துப்பணி.

*வினா எண் 97—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

புதிதாக நாகர்கோவிலுக்கும்—சென்னைக்கும் இடையே பஸ் ஒன்று விட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 20-10-1980 முதல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னை—நாகர்கோவில் தடத்தில் கூடுதலாக இரண்டு பேருந்துகளை விடுகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே ஏ. சி. பஸ் விடுவதற்கு செயற் குறிப்பு உள்ளதா என்ற கேள்வியை நான் கேட்டிருந்தேன். ஆனால் கேள்வியிலே ஏ. சி. பஸ் சேர்க்கப்படவில்லை, விடை யிலாவது ஏ. சி. பஸ் கிடைக்குமா? வெகு தூரம் செல்லும் விரைவுப் பேருந்துகளிலே வயர்லஸ் கருவிகள் பொருத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கேள்வியில் ஏ. சி. கிடைக்க வில்லை, விடையிலாவது ஏ. சி. கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. (குறுக்கீடு) ஓசி என்பதற்கு என்ன சொல்வது என்று